21st January 1965]

அல்லது அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டிருப்பது, கூட்டுறவுத்துறையில் 3, தனியார் துறையில் 4. எல்லா ஆலைகளையும் கூட்டுறவுத் துறையில் வைக்கவேண்டும் என்றால் அதற்குப் போதிய நிதி வசதி கிடையாது. ஆகவே நமக்குத் தொழில் வளரவேண்டும், பண்டங்கள் அதிகம் உற்பத்தியாக வேண்டும் என்பதால் எந்த எந்தத் துறையில் கோரிக்கை வந்தாலும், அவற்றைக் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்கும்.

**திரு. கே. பொன்னையன்:** தலைவர் அவர்களே, சர்க்கரைக் கட்டுப்பாட்டை எடுத்துவிடப் போவதாக பேச்சு அடிபடுகிறதே, அப்படி நீக்கப் போவதாக உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அது எனக்குத் தெரியாது. மத்திய சர்க்காரைக் கேட்கவேண்டும்.

***43 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்):** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி வட்டத்தில் சிறிய அளவில் சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்க யாருக்கேனும் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இல்லை.

### எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை

***44 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் (திரு. ம. கமலநாதன் சார்பில்):** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவுவது எந்த நிலையில் உள்ளது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மத்திய அரசாங்கம் சென்னைக்கருகிலுள்ள மணலி என்னுமிடத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையை நிறுவ உத்தேசித்துள்ளது. பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

**திரு. கே. ஏ. மதியழகன்:** பூர்வாங்க வேலைகளில் நில ஆர்ஜிதம் போன்றவைகள் எவ்வளவு தூரம் முடிந்திருக்கின்றன? அது பற்றிய விவரங்கள் கூற முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நிலம் வாங்கியாய்விட்டது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மணலியில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மணலியில் நிலம் வாங்கியாய்விட்டதென்றால், அந்த நிலத்தின் மதிப்பு எவ்வளவு போடப்பட்டது?

[21st January 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்தக் குறிப்புகளெல்லாம் சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டிலே போட்டு அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். அதிலே பார்த்துக்கொள்ளலாம்.

## சிமெண்ட் தொழிற்சாலை

*** 45 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி (திரு. ம. கமலநாதன் சார்பில்):** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடசேலம் மாவட்டத்தில் சிறிய அளவில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி:** இராமேசுவரம், தனுஷ்கோடிப் பகுதியில். . . .

**கனம் சபாநாயகர் :** வடசேல மாவட்டத்தில் சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கும், இராமேசுவரத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**திரு. கரு. சீமைச்சாமி:** இராமேஸ்வரம், தனுஷ்கோடிப் பகுதியில் கடலுக்கடியில் இருக்கும் நுரைச் சங்குகளை (கோரல் ரீஃப்) தோண்டியெடுத்து துலுக்கப்பட்டி சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு போகிறார்கள். கடலுக்கடியில் அந்த 'ரீஃப்' இருப்பதால் அலைகள் வந்தால் தடுக்கக்கூடிய சக்தி அதற்கு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது அந்த ரீஃப்களைத் தோண்டியெடுத்துப் போகாமல் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் சொல்கிற கருத்து சரியா, தவறு என்றே எங்களுக்குத் தெரியாது. யாரோ வழிப்போக்கன் கடலிலேயிருக்கும் கோரல் ரீஃப்பைத் தோண்டியதால் அலை வந்துவிட்டது என்றால், அதையெல்லாம் பார்த்து சர்க்கார் நடவடிக்கை எடுப்பதாயிருந்தால் சர்க்காரே நடத்த முடியாது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இராமேசுவரம் தீவில் தனியார் துறைக்கு சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் அப்படியே இருக்கிறது. தொழிற்சாலை நடைபெறாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் சமீபத்தில் ஏற்பட்ட புயல் கொந்தளிப்பை அனுசரித்து, இராமேஸ்வரம் அருகில் பொதுத்துறையில் அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மத்திய திட்டக் கமிஷனை நமது தொழிலமைச்சர் வற்புறுத்துவார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இராமேசுவரம் லைசென்ஸை சர்க்கார் எடுத்து நடத்துவதாக உத்தேசம் இல்லை.